
# 30 ஓர் எடுத்துரைப்பை ஏற்பாடு செய்தல்

## இலக்கு

*சிறு எடுத்துரைப்புகளைச் செய்யும்போது மாணவர்கள் பொருள், மொழி, நாடகப்பண்புகள் ஆகியவற்றை ஒருங்கிணைக்கக் கற்கின்றனர். கற்பித்தல் மதியுரை மாணவர்கள் எவ்வாறு ஓர் எடுத்துரைப்புக்கு எல்லா மொழியியலமைப்புகள் தொடர்பாகத் தங்களை ஏற்படுத்திக்கொள்கின்றனர் மற்றும் அதனை எவ்வாறு பின்வரும் பட்டியலில் உள்ள முன்னூட்டற் குறிப்புகளால் மேம்படுத்தலாம் என்பனவற்றைச் சுட்டுகிறது.*

தரம் 3 - 9

30 - 45 மணித்துளிகள்




**குறிப்புகள்:**

- பெரும் பிரிவுக் கல்வி வகுப்புகளில், கீழ்நிலைகளில் சிறு எடுத்துரைப்புகள் வழமையாக ஏற்கெனவே பயிற்சிசெய்யப்பட்டிருக்கும். பா.மொ.க விலும் மாணவர்கள் பொருத்தமான பக்கத்துணை பெற்றால் இதுவும் நடைபெறலாம், 3ஆம் / 4ஆம் தரத்திலிருந்து பயனுடையதாயிருக்கும்.
- பார்க்கவும் தலைப்பு "எடுத்துரைப்பு" அத்துடன் #31 மற்றும் மாணவர் கருவிகள் M14 "கற்றல் மதிநுட்பங்களையும் உத்திகளையும் நடுநிலைப்படுத்தல்" (= இத்தொடரில் தொகுதி 5) இக்கருவிப் பகுதி "எடுத்துரைப்பினை ஏற்பாடு செய்தலும் எடுத்துரைத்தலும்" என்னும் தலைப்புக்கு அர்ப்பணிக்கப்படுகிறது. அத்துடன் பொருள் தொடர்பான பண்புகளையும் (தகவல் திரட்டல் முதலியன) உள்ளடக்குகின்றது.
- மேற்குறிப்பிட்ட நேர அளவு செயற்பாட்டின் நான்காவது பிரிவுக்கு மட்டும் பொருந்துவது (நல்ல எடுத்துரைப்புக்கான வழிகாட்டு விதியினை விளக்கும் வேண்டுகைக்கான தொடர்ச்சி).

---

**நடைமுறை:**

- ஒவ்வொரு பிள்ளையும் ஒரு தலைப்பை (எ.கா. "என் பொழுதுபோக்கு", "எனது பேரன் பேர்த்தியர் வாழ்விலிருந்து", "எனது கனவுப் பணி", முதலியன) தன் எடுத்துரைப்புக்குத் தேர்ந்தெடுக்கிறது. மாற்றாக இணையர்களாக எடுத்துரைப்புச் செய்தல். எடுத்துரைப்புகள் 5-10 மணித்துளிகளுக்கு நடைபெறும்.
- மாணவர்கள் ஒப்படைகள் மற்றும் தகவல் திரட்டல் தொடர்பான திட்டமிடலைத் தொடங்குகின்றனர். "பா.மொ.க வுக்கான கற்றல் மதிநுட்பங்களும் உத்திகளும்" தொகுதியில் குறிப்பிடப்பட்ட கருவிகள் M14 என்பவற்றையும் பார்க்கவும் (இவை இளைய மாணவர்களுக்கு எளிமைப்படுத்த வேண்டும்).
- மாணவர்கள் ஆசிரியருடைய பக்கத்துணையுடன் மொழி தொடர்பான சிக்கல்கள் (சொற்களஞ்சியம், முதலியன) பற்றி குறிப்புகள் எடுக்கின்றனர்.
- எடுத்துரைப்பில் வாய்வழி வெளிப்பாடு தொடர்பாக M14.7 இல் குறிப்பிடப்பட்ட குறிப்புகளுக்கு இன்னும் மேலாக, ஒரு தொடர் கூட்டாக வகுப்பில் நடத்தப்பட்டது. அது #22, #29 இல் குறிப்பிடப்பட்ட மாதிரி அமைப்பினைப் பின்பற்றிச் செல்கிறது. (நல்ல / கூடாத எடுத்துக்காட்டுகள் மாணவர் தொகுக்கும் நல்ல எடுத்துரைப்புகளுக்கான வழிகாட்டு விதிக்கான அடிப்படையாக அமைகின்றன. பட்டியலைக் கீழே காண்க). மாணவர்கள் உரைத்தல், உரத்துப் படித்தல் பற்றிய (முறையே #22, #29) குறிப்புகளை மீட்டல் செய்தல் அவர்களுடைய வேலையை உறுதியாக எளிமையாக்கும்.
- எடுத்துரைப்பின் (பார்க்கவும் 31) தனித்தனிப் பகுதிகளுக்கு இன்றியமையாத சொற்களஞ்சியம் மற்றும் வாக்கிய அமைப்புத் தொகுதிகள் ஆகியனவற்றை ஒரு சிறப்புத் தொடர்வரிசையாக திரட்டலாம்.
- மாணவர்கள் 2-3 எடுத்துரைப்பு குறிப்புகளைத் தேர்ந்தெடுக்கின்றனர். அவர்கள் அவற்றிற் சிறப்பான கண்காணிப்புச் செலுத்த விரும்புகின்றனர். அவர்கள் எடுத்துரைப்புகளை தனித்தனியாகவும் இணையர்களாகவும் அல்லது சிறு குழுக்களாகவும் பயிற்சி செய்து, ஒருவருக்கொருவர் பின்னூட்டலை வழங்குகின்றனர் (வினா: எடுத்துரைப்பில் என்ன நன்றாக அமைந்தது? ", "எப்பண்புகள் இன்னும் செம்மைப்படுத்தலாம்? ").
- நிறைவாக, எடுத்துரைப்பு முழு வகுப்புக்கு அல்லது குழு நிலையில் வழங்கப்படுகிறது. எடுத்துரைப்பின் பொருளையும் தரத்தினையும் கருத்திற்கொண்டு கலந்துரையாடலும் கணிப்பீடும் தொடர்கின்றன. கணிப்பீட்டில் எடுத்துரைப்புக்கு முன்னூட்டற் குறிப்புகளைப் பின்பற்றுவது பற்றியும் கருத்திற்கொள்ளப்படுகிறது.




## எடுத்துரைப்புக்கான குறிப்புகள்:

- உங்களை எல்லோரும் விளங்கிக்கொள்ள உரத்தும் தெளிவாகவும் பேசுக!
- விரைவாகப் படிக்க வேண்டாம், ஆனால் மிக மெதுவாகவும் அல்ல. இடை நிறுத்தங்கள் செய்க.
- எழுத்துருவைப் பார்த்துப் படிக்க வேண்டாம், கட்டற்ற முறையில் பேசுக அல்லது திறவுச் சொற்களுடன் குறிப்பு அட்டைகளைப் பயன்படுத்துக.
- முடியுமாயின், ஒன்று அல்லது பல படங்களை அல்லது பொருளுடன் தொடர்புடைய ஒரு கலைப்பொருளைக் காட்சிப்படுத்தக் காண்பிக்கவும்.
- உங்கள் குரலை சந்தர்ப்பத்திற்கேற்ப பயன்படுத்துக: உரத்தும் மென்மையாகவும், ஊக்கத்துடன், கேள்விக்குறியாக.
- உங்கள் முகபாவங்களையும் சைகைகளையும் பயன்படுத்துக: உங்கள் எடுத்துரைப்புக்குப் பொருந்துவதாக உங்கள் முக வெளிப்பாடுகளை மற்றும் உங்கள் தோற்றப்பாங்கினை மாற்றுக.
- உங்கள் அவையோருடன் எப்பொழுதுமே விழித் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளவும்.
- எடுத்துரைப்பின்போது வினாக்களைத் தொடுத்தும் அல்லது முடிவில் கருத்துக்களைக் கேட்டும் உங்கள் அவையினை உள்ளீர்த்துக்கொள்ளவும்.